


## மின்சார வாகனங்களுக்கு

# 4 மெட்ரோ ரெயில் நிலையங்களில் 'சார்ஜ்' மையம்

சென்னை, நவ.23–

சுற்றுச்சூழலை பாதிக்காத மின்சார வாகனங்களின் உற்பத்தி அதிகரித்து உள்ளது. சென்னையிலும் மின்சார கார் உள்ளிட்டவற்றின் பயன்பாடு அதிகரிக்க தொடங்கி உள்ளது.

இதை கருத்தில்கொண்டு மின்சார வாகனங்களை சார்ஜ் செய்வதற்கான மையம் சென்னை நந்தனம் மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்டது. தற்போது கோயம்பேடு, அண்ணாநகர் கிழக்கு, ஐகோர்ட்டு ஆகிய 3 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் தனியார் நிறுவனம் சார்பில் 'இ–சார்ஜ்' மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான கட்டண விவரங்கள் மற்றும் இதர தகவல்களை ''ELECTREEFI'' என்ற செயலியை( ஆப்) பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.